பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 03 சனிக்கிழமை 18.07.2020 கதிர் 251

**இனிது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற –தேர்தல் விதிமுறை மீறல் பற்றிய – தெ(தி)ருக் கூத்து தொடர்பாக – நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்து இருந்தேன். சற்று விவரமாகக் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று கொழும்பில் தேர்தல் ஆணையத்தின் பக்கம்02

# தமிழர் விரும்பும் தீர்வு எம் ஆட்சியில் உறுதி

## ராஜபக்ஷக்களை நம்பிப் பயனில்லை என்கிறார் சஜித்



கொழும்பு, ஜூலை .18

நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம். ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியடையாவிட்டாலும் எனக்கு லட்சக் கணக்கில் வாக்குகளை அள்ளி வழங்கிய தமிழ் மக்களை நான் மறக்கவே மாட்டேன். அவர்களுக்கு எப்போதும் நன்றியுடையவனாகவே நான் இருப்பேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பக்கம் 02

## ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் வைத்து யாழ்ப்பாணம் பொலிஸாரால் பக்கம் 02

## கூட்டமைப்பினரின் விஞ்ஞாபனம் இன்று

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூலை .18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று சனிக்கிழமை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவினால் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

யாழ். மாட்டீன் வீதியில் பக்கம் 02

## 12 வயது சிறுமிக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 18

ராஜங்கனையில் 12 வயது சிறுமிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

139 பேரின் உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் இந்த 12 வயதுடைய பக்கம் 02

## பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் சுகாதார அமைச்சு!

– ரணில் வலியுறுத்து

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலிருந்து இலங்கைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் விலகியிருப்பதாக வெளியாகும் செய்திகள் மிகுந்த விசனமளிக்கின்றன. தற்போதுள்ள நெருக்கடி நிலையில் பக்கம் 02

## இரவில் நடைபெறும் வீதி திறப்பு விழாக்கள்

### உடன் நடவடிக்கை எடுக்க கோரும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு சில வீதிகளின் திறப்பு விழாக்கள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரின் கவனத்துக் குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கையை உடனடியாகவே எடுக்கவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே ஈ.பி.டி.பி. சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதி பக்கம் 02

## கொரோனா சுகாதார வழிகாட்டல் அதிவிசேட வர்த்தமானி வெயியீடு

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள் கொண்ட சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தலில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார பக்கம் 02




இறுதிப்போரில் கணவன் காணாமல் ஆக்கப்பட்ட

## முன்னாள் போராளி மீது தாக்குதல்; காயங்களுடன் வைத்தியசாலையில்

*– வீடும் உடைக்கப்பட்டு வீதியில் வீசப்பட்டன உடைமைகள்*



கிளிநொச்சி திருநகர் தெற்கில் வசித்து வந்த மூன்று மாவீரர்களின் சகோதரியும், இறுதிப்போரில் கணவன் காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் போராளியுமான எழில்வேந்தன் கோணேஸ்வரி தாக்கப்பட்டு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் வசித்த வந்த வீடும் உடைக்கப்பட்டு அவரது உடைமைகள் வீதியில் வீசப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் மேலும் தெரிவித்ததாவது: – பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் இந்த விடயம் விரிவாகப் பேசப்பட்டது.

ஏதோ வெட்டிப் பிடுங்குவது போல தேர்தல் ஆணையரும், ஏனையோரும் கூட்டத்தில் வீராவேசமாகப் பேச்சு பேசினர் என்றும் கேள்வி.

ஏதோ திங்கட்கிழமை தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை என்னவென்று தெரிய வரும் என்று ஒரு சாரர் நம்புகின்றனர்.

எனக்கு என்னவோ நம்பிக்கையே இல்லை.தேர்தல் ஆணையம் இது விடயத்தில் தனக்கு அதிகாரம் இருப்பதாக வாய் வீச்சு நடத்திக் கொண்டு சுழற்றும் வாள், 'மொட்டை வாள்'.அது பயனற்றது.

இன்னொரு கட்டுக் கடிதம் தேர்தல் ஆணையத்திடமிருந்து பறக்கும். அவ்வளவுதான்.

தேர்தல் முடியும் வரை – ஓகஸ்ட் 19 வரை – ரிஷாத் பதியுதீன் போன்ற முக்கிய அரசியல்வாதிகளை விசாரணை என்று அழைத்துத் தொல்லைப்படுத்தாதீர்கள் எனப் பதில் பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியது. அந்தக் கடிதம் கிடைத்து அடுத்த நாள் இன்னொரு விசாரணைக்கு வருமாறு ரிஷாத்துக்கு அழைப்பாணை பொலிஸ் தரப்பிலிருந்து போயிருக்கின்றது. எதிரணியில் இருக்கும் ரவி கருணாநாயக்கா போன்றோருக்கும் தேர்தல்களுக்கு இடையில் அப்படி அழைப்பாணை போகவிருக்கின்றது என்று ஒரு தகவல்.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத் தலைப் பதில் பொலிஸ்மா அதிபரே பொருட்படுத்தமாட்டார் என்றால் நம் உள்ளூர் அட்டகாச அரசியல்வாதியோ, அவரின் எடுபிடி அரச ஊழியர்களோ ஏன் பொருட்படுத்தப் போகின்றனர்?

இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு. மேற்படி 'சப்ரிகம' திட்டங்களை இரவு நேர ஆடம்பரத்துடன் திறந்து வைத்த நமது உள்ளூர் அரசியல்வாதியின் 'திருகுதாளம்' குறித்து, பொலிஸ் விசாரணை நடத்த வேண்டும் என்றும் தேர்தல் ஆணையக் கூட்டத்தில் பேசப்பட்டதாம்.

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற கதைத்தான் இது. அந்தப் பிரதேச பொலிஸே அந்த அரசியல்வாதியின் போடுதடி – பொக்கற்றுக்குள் – என்ற பெயரைச் சம்பாதித்து வைத்திருக்கையில், அந்தப் பொலிஸைக் கொண்டு விசாரிப்பது என்பது பெரும் வேடிக்கையன்று வேறு யாது?

இதில் தேர்தல் ஆணையம் ஏதும் செய்யும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது. ஏனென்றால் என் கணிப்பீடு இந்தத் தேர்தல் ஆணையம் கையாலாகாத ஒரு குழு.

இந்தத் தேர்தலோடு 19ஆவது திருத்தமும் 'அவுட்' ஆகலாம். அத்தோடு சுயாதீன தேர்தல் ஆணையமும் செயலிழக்கலாம்.

இருந்த – இருக்கின்ற – ஆணையமும் உஷாராக இல்லாவிட்டால் அது இருந்தென்ன? இல்லாமல் விட்டென்ன?

இத்தகைய திருகுதாள அரசியல்வாதிகளின் 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும்' கீழ்த்தரமான வேலைகள் தொடர்பில் தேர்தல் ஆணையம் சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால், அத்தகைய வேலைகளுக்குத் துணைபோகும் பிரதேச செயலக, மாவட்ட செயலக அதிகாரிகளை ஊடகங்களில் பகிரங்கமாகப் பெயர் குறிப்பிட்டு அம்பலப்படுத்துவதுதான் ஒரே வழி.

ஆனால், அதுவும் கூட சாத்தியப்படப் போவதில்லை. ஏனென்றால் தேர்தல் விளம்பரங்களுக்காகவும், செயலக விளம்பரங்களுக்காகவும் வாய் பிளந்து காத்திருக்கும் நம் ஊடகங்கள் அவற்றைப் பிரசுரிக்க முன்வருமா என்பது கேள்விக்குறியே.

ஆகவே, அரச செலவினத்தில் தன் அரசியலை நடத்தும் அந்த அரசியல்வாதியின் திருவிழா தொடரத்தான் போகின்றது – தடுக்கும் வழி ஏதுமின்றி....!

–மின்னல்–

## பொறுப்புணர்வுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தொடர்ச்சியாக முன்னின்று செயற்பட்டு வந்த பிரிவினரைத் தக்கவைத்துக் கொண்டு ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டிய கட்டாயமான பொறுப்பு சுகாதார அமைச்சுக்கு இருக்கின்றது.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உலக வங்கியால் வழங்கப்பட்ட நிதி தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். அந்த நிதிக்கு என்ன நேர்ந்தது என்பதை உடனடியாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

நாட்டில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த காலகட்டத்தில் ஜனாதிபதி ஊரடங்குச்சட்டத்தைப் பிறப்பித்தார். நாமும் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினோம். எனினும், அதனைத் தொடர்ந்து நாம் இந்த நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்குத் தயாராகியிருக்க வேண்டும்.

தொற்றாளர்களைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகளவில் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அரசு அதனைச் செய்யவில்லை. மாறாக அதனூடாக அரசியல் ஆதாயமொன்றை அடைந்துகொள்வதற்கு முற்பட்டது. அதன்படி 'எமது அரசால் மாத்திரமே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்' என்று கூறிக்கொண்டு, வெகுவிரைவில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு முற்பட்டது. ஆனால், உண்மையில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதா? உலக நாடுகள் அனைத்தும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தபோதிலும், இலங்கை அதனைச் செய்யவில்லை.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உலக வங்கியிடமிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற நிதிக்கு என்ன நேர்ந்தது என்று நான் கேள்வி எழுப் பியிருந்தேன்.ஆனால், உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து நிதி கிடைக்கவில்லை என்றும், உலக வங்கியிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு 3 வருட காலமாகும் என்றும் சுகாதார அமைச்சர் பதில் வழங்கியுள்ளார். ஆனால், உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து 1.9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது எனக் கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி சுகாதார அமைச்சர் அறிவித்திருந்தார். அதனை உறுதிப்படுத்தி சுகாதார ஸ்தாபனத்தின் கொழும்பு அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டது. அதேபோன்று இம்மாதம் 4 ஆம் திகதி பிரதமர் அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

உலக வங்கியிடமிருந்து 128 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைத்திருக்கின்றது. சமூக சேவை வேலைத்திட்டத்துக்கென 45 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி மேலுமொரு 75 மில்லியன் டொலர் கிடைக்கவுள்ளது.

இவை அவசர தேவைகளின்போது வழங்கப்படும் நிதி என்பதால் மூன்று வருடகாலத்துக்கு வழங்கப்படும் சாத்தியங்கள் இல்லை. அவ்வாறெனில் இந்த நிதி அனைத்துக்கும் என்ன நேர்ந்தது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் – என்றார்.

---

## 12 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமிக்கு மட்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

## இரவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சப்ரிகம திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதிகளை வேட்பாளர் ஒருவர் திறந்து வைத்தமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஆதாரங்களுடன் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருப்பினும இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணத்துக்கு இந்த வாரம் வருகை தந்திருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என்றும், அப்படி திறக்கப்பட்ட வீதிகளில், இது பொது மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்டது என்ற பெயர்ப் பலகையை வைக்குமாறும் அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு சில வீதிகளின் திறப்பு விழாக்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பான முறைப்பாடு யாழ். மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு உரிய நேரத்துக்கு தெரி விக்கப்பட்டபோதும், அதிகாரிகள் தாமதமாகச் சென்றுள்ளனர். அதேவேளை, அதிகாரிகள் சென்ற பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளில் அரசியல்வாதியும் பங்கேற்கவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளருக்கு நேற்று முறையிடப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கையை உடனடியாகவே எடுக்க வேண்டும் என்று தவிசாளர் தெரிவித்துள்ளார்.

---

## முன்னாள் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து மரணித்த எனது மூன்று சகோதரர்களில் ஒருவர் வாங்கிய காணியில்தான் நான் வசித்து வந்தேன். அரசியல் பின்புலத்தில் தொடர்ச்சியாக குறித்த காணியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கு கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் நான் தொடர்ச்சியாக குறித்த காணியில் வசித்து வந் தேன்.

அவ்வவ்போது மாத்தளையிலிருந்து காணியை இயக்கத்திற்கு விற்பனை செய்துவிட்டு சென்றவர் என ஒருவரை வைத்து எனக்குக் கடும் நெருக்கடி கொடுப்பட்டது. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி பொலிஸாரின் ஆதரவுடன் சிலர் நான் குடியிருக்கும் காணிக்குள் நுழைந்து வேலியைப் பிரித்து எறிந்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தபோது நான் எதிர்த்து நின்றேன். இதன்போது நான் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளேன். எனது வீட்டு உடமைகள் வீதியில் எறியப்பட்டுள்ளன. வசித்த வீடும் உடைக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினால் எங்கு செல்வேன் என்றே தெரியவில்லை.

சில வருடங்களுக்கு முன் நள்ளிரவில் எனது தொலைபேசி அழைப்புக்குத் தொடர்புகொண்ட உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் கொத்துரொட்டி கட்டிக்கொண்டு வரட்டா எனக் கேட்ட விடயத்தை நான் அம்பலப்படுத்திய நாள் முதல் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றேன்.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை – என்றார்.

---

## கொரோனா சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டுதல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சியால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சுகாதார வழிகாட்டல் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்படாவிட்டால் ஆகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தலைத நடத்துவதில் சிக்கல் ஏற்படும் என எச்சரித்திருந்த நிலையிலேயே குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்கள் விரும்பும் நியாயமான தீர்வை வழங்கியே ஆகவேண்டும். அது அரசின் கடமையாகும்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளித்திருந்த ராஜபக்ஷ அரசின் பேச்சாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, 'தமிழ் மக்களோ அல்லது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ விரும்புகின்ற தீர்வை அரசு வழங்கவே மாட்டாது. அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வு என்று சம்பந்தன் கேட்பது சமஷ்டி தீர்வே. இந்த சமஷ்டி தீர்வுக்கு ராஜபக்ஷ அரசில் இடமேயில்லை' என்று கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:–

நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம். தமிழர்கள் தமிழீழத்தைக் கோரவில்லை; நாட்டைப் பிரித்துத் தருமாறு கேட்கவில்லை. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வையே கேட்கின்றார்கள். எனவே, எமது ஆட்சியில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம். புதிய அரசமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் தமிழர்களுக்கான தீர்வை வழங்குவோம்.

அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வை சமஷ்டி தீர்வு என்றும், அது தனி நாட்டுக்கு வழிவகுக்கும் என்றும் ராஜபக்ஷ அணியினர் கூறுவது வேடிக்கையானது. அரசமைப்புப் பற்றி விளக்கம் இல்லாமல் அவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் ஒரு போதும் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காது. அவர்களை நம்பிப் பயனில்லை.

எனவே, நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழர்களுக்கு அவர்கள் விரும்பும் தீர்வை வழங்கியே தீருவோம். ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியடையாவிட்டாலும் எனக்கு லட்சக் கணக்கில் வாக்குகளை அள்ளி வழங்கிய தமிழ் மக்களை நான் மறக்கவே மாட்டேன். அவர்களுக்கு எப்போதும் நன்றியுடையவனாகவே நான் இருப்பேன் – என்றார்.

---

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குருநகர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இரு இளைஞர்களை பொலிஸார் சோதனையிட்டபோது அவர்களிடம் இருந்து 100 மில்லிகிராம் ஹெரோயின் பக்கெற்றுக்கள் இரு நபர்களிடமும் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் அனலைதீவு மற்றும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

---

## கூட்டமைப்பினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தமிழ் அரசுக் கட்சியின் தலைமையகத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்த வெளியீடு இடம்பெறவுள்ளது.

இந்த வெளியீட்டின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்றைய தினம் விஞ்ஞாபனம் வெளியிடப்படுவதையடுத்து எதிர்வரும் 26ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத் தொகுதி ரீதியிலான பிரசாரக் கூட்டங்களும் ஆரம்பமாகின்றன. இறுதிப் பிரசாரக் கூட்டம் 2ஆம் திகதி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்கள் ஒன்று திரண்டு வாக்களித்தால் திருமலையில் 2 ஆசனங்கள் பெறலாம்!

## இப்படி நம்புகின்றார் சம்பந்தன்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை,ஜூலை 18

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ்பேசும் மக்கள் வீட்டு சின்னத்திற்கு வாக்களிக்க வேண் டும் என தமிழ் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள அவரது காரியாலயத்தில் நேற்று முதியோர் சங்கங்கள், இளைஞர் அமைப்புகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை தேர்தலானது மிக முக்கியமான தேர்தலாகும். திருகோணமலை மாவட்டத்தில் 90 ஆயிரம் தமிழ் வாக்குகள் இருக்கின்றன. அதில் 70 ஆயிரம் வாக்குகளைப் பெற்றால் இரண்டு ஆசனங்களை நாம்பெறமுடியும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து தமிழ் பேசும் மக்களும் மாற்று கட் சிகளுக்கு வாக்களிக்காமல் வீட்டுச் சின்னத்திற்குத் திரண்டு வாக்களிக்க வேண்டும்.

தற்பொழுது உங்களை அழைத்துப் பேசுவதன் நோக்கம் நீங்கள் உங்களது பகுதிகளில் மிகவும் பிரபலமானவர்கள் என்பதை அறிந்துள்ளோம். மாற்றுக் கட்சியினர் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக் கும் வகையில் வேறு கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு கூறுவார்கள். ஆனாலும் நீங்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று, வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்காமல் போனால் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த தேர்தலின் போதும் வடக்கு கிழக்கில் 16 ஆசனங்களை பெற்றிருந்தோம். இம்முறை 20 ஆசனங்களை பெறுவதற்கு பொன்னான வாக்குகளை வீட்டுச் சின்னத் திற்கு அளிக்க வேண்டும். சர்வதேச சமூகத்துக்கு எமது ஒற்றுமையை எடுத்துக் காட்ட வேண்டும். புதிய அரசியல் சாசனம் உருவாக்குவதன் முக்கியத்துவத்தை எமது வாக்குளே தீர்மானிக்கும். - எனவும் இரா சம்பந்தன் இதன்போது குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

## பௌத்தரின் மனதைப் புண்படுத்தினார் என இந்திக ரத்நாயக்கவை ஆஜராக உத்தரவு!

புத்த மதத்தின் சில விடயங்களை மூடநம்பிக்கை என விமர்சித்தமைக்காக விசாரணை செய்வதற்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு இந்திக ரத்நாயக்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

தன்னை நாத்திகராகவும், பகுத்தறிவாளராகவும் கூறிக் கொள்ளும் இவர் மதங்களின் கட்டுக்கதைகளையும் மூடநம்பிக்கைகளையும் சமூகவலைத் தளங்களில் விமர்சித்து வருபவராவார். இவர் பேஸ்புக் பதிவுகளினூடாகவும் பேஸ்புக்கைத் தளமாகக் கொண்ட குழுக்கள் மற்றும் வலையமைப்புக்கள் ஊடாகவும் புத்தரைப் பற்றியும் பௌத்த மதத்தைப் பற்றியும் கட்டுக்கதைக ளைப் பரப்பி பௌத்தர்களின் மனதைப் புண்படுத்தினார் எனவும், இளைய தலைமுறையை தவறாக வழி நடத்தினார் எனவும் கூறி பௌத்த தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அங்குலுகல்ல ஸ்ரீ ஜினா னந்த தேரர் கடந்த மாதம் 08ஆம் திகதி சி.ஐ.டி யில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தார்.

ரத்நாயக்கவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விசாரணை செய்யுமாறு இவர் சி.ஐ.டி. பணிப் பாளரை வேண்டியிருந்தார். இதற்கமைய இம்மாதம் 29 ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு ரத் நாயக்கவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

அரச சுகாதார சேவையின் சுகாதார ஊழியரான ரத்நாயக்க புத்த மதம் ஜைன மதத்திலிருந்து உருவானது என்று கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## போட்டியிடத் தைரியம் இல்லாதவர்களே தேர்தலை ஒத்திவைக்கக் கோருகின்றனர்

### ரணில், சஜித்தின் கருத்துக்கு சுசில் பதிலடி



போட்டியிடத் தைரியம் இல்லாதவர்களே பொதுத்தேர்தலை ஒத்திவைக்குமாறு கோருகின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தலைத் தொடர்ந்தும் பிற்போட்டால் நாட்டில் அரசமைப்பு ரீதியில் பாரிய நெருக்கடி ஏற்படும். கொரோனா வைரஸ் பரவலைக் காரணம் காட்டி ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலைப் பிற்போடுமாறு எதிர்த்தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். தேர்தலில் வாக்களிக்க மக்கள் தயாராக உள்ளார்கள். போட்டியிடத் தைரியம் இல்லாதவர்களே தேர்தலைப் பிற்போடுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று சமூக தொற்றாக பரவலடையவில்லை என்பதை சுகாதாரத் தரப்பினர் உறுதிப்படுத்தியுள்ளார்கள். பொதுத் தேர்தலைத் தொடர்ந்து பிற்போட்டால் நாட்டில் அரசமைப்பு ரீதியான நெருக்கடிகள் ஏற்படும்.

ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் பொறுப்புடன் கருத்துரைக்க வேண்டும் - என்றார்.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதியை நாட முடியாத இக்கட்டு

**கொரோனாத் தொற்றுப் பரவலைக் காரணம் காட்டி பொதுத் தேர்தலை ஒத்தி வைக்கும்படி எதிர்த்தரப்புகள் முன்வைக்கும் கோரிக்கையை ஆளும் தரப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸாவும் தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சி, கொரோனாத் தொற்று ஆபத்து என்ற சாக்குப் போக்குக்குப் பின்னால் ஒளிக்க முற்படுகின்றனர் என ஆளும் தரப்பு குற்றம் சுமத்துகின்றது.**

**ஆளும் தரப்பைப் பொறுத்தவரை – ராஜபக்ஷக்களின் மொட்டுக் கட்சியினரைப் பொறுத்தவரை – எதிரணி பிளவுபட்டுக் கிடக்கும் தற்போதைய வாய்ப்பான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கக் கூடிய ஆசனங்களை வாரிச் சுருட்டி அள்ள வேண்டும் என்ற பேரவா. அதனால் எந்த நெருக்கடிக்கும் – பேரிடருக்கும் – மத்தியிலும் பொதுத் தேர்தலை நடத்தி முடித்து விட வேண்டும் என்று அவர்கள் துடியாய்த் துடிக்கின்றனர்.**

**கொரோனா வைரஸுடனேயே அடுத்த இரண்டு வருடங்களாவது வாழப்பழகிக் கொள்ள வேண்டியிருக்கும் என்ற உலக சுகாதார அமைப்பின் நிலைப்பாட்டைக் காரணமாகக் காட்டும் ஆளும் தரப்பினர், அந்த நெருக்கடிக்கு மத்தியில் ரணில், சஜித்தின் கோரிக்கையை ஏற்றுத் தேர்தலைத் தள்ளிவைத்தால் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தேர்தலையே நடத்த முடியாமல் போய்விடும் என்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.**

**பொதுத் தேர்தலை நடத்த முடியாமல் போனால் பெரும் அரசமைப்பு நெருக்கடி ஏற்படும். அத்தகைய அரசமைப்பு நெருக்கடியை உருவாக்கும் உள்நோக்கத்துடன்தான் ரணிலும், சஜித்தும் இவ்வாறு பொதுத் தேர்தலை ஒத்தி வைக்குமாறு வற்புறுத்துகின்றனர் என்று ஆளும் தரப்புப் பிரமுகர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.**

**உண்மையில் பொதுத் தேர்தல் ஏற்கனவே இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டமையால் நாட்டில் ஓர் அரசமைப்பு நெருக்கடி சத்தம் சந்தடியின்றிக் கட்டவிழ்ந்து விட்டது. பலரும் அதனைத் தெரிந்தும் தெரியாதோர் போல அதீத அமைதி காக்கின்றனர்.**

**இன்னொரு தடவை தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்றால் அந்த அரசமைப்பு நெருக்கடியின் தீவிரம் பகிரங்கமாக அம்பலமாகும். அவ்வளவே.**

**மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. இனி ஒகஸ்ட் 5ஆம் திகதிக்குப் பின்னர்தான் புதிய நாடாளுமன்றம் கூட முடியும். – அதுவும் கூட திட்டமிட்டபடி ஒகஸ்ட் 5ஆம் திகதி தேர்தல் நடைபெற்று, அடுத்த நாள் வாக்குகள் எண்ணும்பணி விக்கினமின்றி நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டால்தான் சாத்தியம்.**

**நாடாளுமன்றம் இரண்டு மாதங்களுக்கு மேல் செயலிழந்து, கூடாமல் இருக்கக் கூடாது என்பதுதான் அரசமைப்பு ஏற்பாடுகளின் தெளிவான – திட்டவட்டமான – வெளிப்படையான – எதிர்பார்ப்பு. நோக்கம். எல்லாமுமே.**

**இப்போதைய நிலையில் ஐந்து மாதங்களாகியும் நாடாளுமன்றம் கூட முடியாது, சட்டவாக்கல் சபை செயற்பட இயலாது என்ற நெருக்கடி.**

**இது பெரிய அரசமைப்புச் சிக்கல்தான்.**

**கொரோனா நெருக்கடி தீவிரமடைந்து, தேர்தல் இன்னும் ஒரு தடவை தள்ளிப் போகுமானால் – அதனால் நாடாளுமன்றம் மீளக் கூடுவது திரும்பவும் காலவரையறை குறிப்பிடாது ஒத்திவைக்கப்படுமானால் – அரசமைப்பு நெருக்கடி மேலும் தீவிரமாகும்.**

**அத்தகைய சூழலில் என்ன செய்வது என்ற கேள்வி எழுகின்றது.**

**உண்மையில் இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்கள் எழும் போது, பிரச்சினைக்குத் தீர்வு அல்லது வழிகாட்டக் கூடிய தரப்பு நாட்டின் உயர்நீதிமன்றம்தான்.**

**ஆனால், அப்படித் தீர்வைத் தரக்கூடிய நிலையில் உயர்நீதிமன்றம் இப்போது உள்ளதா என்ற ஒரு கேள்வி எழுகின்றது.**

**உயர்நீதிமன்றம் இது விடயத்தில் தனக்குத் தானே ஒரு கட்டுப்போட்டு தன்னைச் செயலிழக்க வைத்திருப்பதை நாம் அவதானிக்க முடியும்.**

**இந்தப் பிரச்சினையின் ஆரம்ப கட்டத்தில் இவ்விவகாரம் உயர்நீதிமன்றத்துக்கு எடுத்துக் சொல்லப்பட்ட போது, அது தொடர்பான மனுக்களை பரிசீலனைக்கு ஏற்பதா என்பதை ஏழு நீதியரசர்களைக் கொண்ட ஆயம் பத்து நாள்களாக செவிமடுத்து, விசாரித்து விட்டு, ஒரு நிமிடத் தீர்ப்பில் காரணம் ஏதும் காட்டாமல் தள்ளுபடி செய்தமை நாம் அறிந்ததுதான்.**

**ஏழு நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற முழு ஆயத்தின் தீர்ப்பு – உத்தரவு – ஏனைய அமர்வுகளைக் கட்டுப்படுத்தக் கூடியது என்பதால் –**

**இன்னொரு தடவை அதே போன்ற ஒரு விண்ணப்பத்தை அதே உயர்நீதிமன்றத்திடம் கொண்டு செல்ல முடியாது என்பதுதான் பொதுவான சட்ட நிலைமையாகும்.**

**இந்தப் பின்புலத்தில் தேர்தலை மீண்டும் நடத்த முடியாத நெருக்கடி ஏற்படுமானால் – அதனால் அரசமைப்புத் சிக்கல் தீவிரமடையுமானால் – அதற்கும் உயர்நீதிமன்றத்திடம் தீர்வு – வழிகாட்ட – கோர முடியாது.**

**ஏனெனில் உயர்நீதிமன்றம் தனது முன்னைய நடவடிக்கை மூலம் இது விடயத்தில் தனக்குத் தானே கட்டுப்போட்டுக் கொண்டு விட்டது.**

# வடக்கு மாகாணத்தில் இதுவரை 204 தேர்தல் விதிமுறை மீறல்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 18

2020ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை வடக்கு மாகாணத்தில் 204 விதிமுறை மீறல்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் அதிகப்படியானவை யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்திலேயே காணப்படுகின்றன. இங்கே 96 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டதோடு வவுனியா மாவட்டத்தில் 33 முறைப்பாடுகளும் ,மன்னார் மாவட்டத்தில் 28 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 24 முறைப்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 23 முறைப்பாடுகளுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில்120 முறைப்பாடுகளும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 84 முறைப்பாடுகளாகவே 204 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

# சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கோண்டாவிலில் நேற்று திறந்துவைப்பு



கோண்டாவில் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸால் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலத்தின் ஐந்து கோடி 50 லட்சம் ரூபா செலவில் குறித்த புதிய கட்டடம் கட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜெயகுமாரன், தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதமர் செயலாளர் பத்திநாதன், வடமாகாண சபை சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்

# வீரசிங்கம் மண்டபத்தில் நாளை நேருக்கு நேர் அரசியல் விவாதம்

தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் நேருக்கு நேர் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சி நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக எம்.ஏ.சுமந்திரன், குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும்,தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கனகரட்ணம் சுகாஷ், நடராஜச் காண்டீபன் ஆகியோரும் கலந்து கொள்வதை உறுதி படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சார்பில் பிரதி நிதிகள் இதுவரை இறுதி செய்யப்படவில்லை. இந்த நிகழ்ச்சியை V Tamil Facebook, YouTube தளம் மூலமாக நேரடியாகப் பார்க்கலாம்.

வணக்கம் Tv மற்றும் UTV ஆகிய தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும்.

மோசமான விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்காமல், மேலைத்தேய அரசியல் விவாதங்கள் போல எதிர் எதிர் தரப்புகள் ஆரோக்கியமான விவாதத்தில் ஒரே மேடையில் ஈடுபடவுள்ளன.

அவர்களிடம் பொது மக்கள் சார்பான கேள்விகளை முன்வைக்கப் பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தக சமூகத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

# வாழைச்சேனையில் விபத்து; இளைஞன் பரிதாபச் சாவு

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதி மாவடிச்சேனை பகுதியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை, மாவடிச்சேனை பாடசாலை வீதியில் வசிக்கும் நாஸர் நஜாத் (வயது - 19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் பகுதியில் வைத்து இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிச்சேனை பாடசாலை வீதியில் இருந்து பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞர் மட்டக்களப்பு பகுதியில் இருந்து பொலனறுவைப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியுள்ளார்.



விபத்துச் சம்பவம் தொடர்பில் கனரக வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் வாழைச்சேனை போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித உரிமை விடயத்தில் இலங்கை நிலை மோசம்!

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் கவலை

லண்டன், ஜூலை 17

இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப் கவலை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் டொமினிக் ரப் மேலும் கூறியுள்ளவை வருமாறு: -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றது.

மேலும் முக்கிய பொறுப்புக்களுக்குச் சர்ச்சைக்குரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையானது, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அரசின் அர்ப்பணிப்பு தொடர்பாகக் கேள்விகளை எழுப்பியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து சிவில் சமூகத்தினர் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் கண்காணிக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் அதிகரித்துள்ளன எனத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதேவேளை அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பலவற்றில் முன்னேற்றம் அவசியம் - என்று கூறியுள்ளார்.



# ஆசனங்களுக்கு மேலதிகமாக பஸ்ஸில் பயணிகள் ஏற்ற தடை

கொழும்பு, ஜூலை 17

பஸ்களில் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரித்துள்ளார்.

ஆசனங்களின் எண்ணிக்கையை விட அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தவிர்க்குமாறு பஸ் உரிமையாளர்களுக்கும், நடத்துநர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இவற்றைக் கருத்திற் கொள்ளாமல் சில தனியார் பஸ்கள் தொடர்ந்தும் அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதாக முறையிடப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு இவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

# கே.கே.எஸ். – கல்கிஸை ரயில் சேவை இரத்து

கொழும்பு, ஜூலை 17

கல்கிஸை - காங்கேசன்துறை இடையேயான குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் சேவை இந்த வாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கோரோனா தொற்றுநோய் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பல ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்தது.

அதனடிப்படையில் காங்கேசந்துறை-கோட்டை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் நாளையும், நாளை மறுதினமும், எதிர்வரும் 20 திகதியும் அதிகாலை 5:10 மணிக்கு கல்கிஸையிலிருந்து புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதேபோன்று காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1:15 மணிக்கு கல்கிஸை நோக்கிப் புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆசனங்களை முன்பதிவு செய்தவர்களுக்கான கொடுப்பனவு மீளச் செலுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.



# ஹெரோயினுடன் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஓட்டோவில் மறைத்துக்கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான 15 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் சாவகச்சேரி மதுவரி உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரப்பகுதி ஊடாக ஓட்டோவில் கடத்திச் செல்லப்பட்ட வேளையில் மதுவரி அலுவலர்கள் போதைப்பொருளைக் கைப்பற்றியதுடன் ஓட்டோவில் சென்ற நபரையும் கைது செய்தனர்.

மதுவரி அலுவலர்கள் ஏ -9 வீதி ஊடாக வந்த ஓட்டோவை மறித்து சோதனையிட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் சிக்கியது.

# மணல் லைசென்ஸ் முறையை தொடர நீதிமன்றம் உத்தரவு!

மணல் போக்குவரத்துத் தொடர்பில் உள்ள அனுமதிப் பத்திர முறையை ரத்துச் செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ள போதிலும், அதையும் மீறி அந்த அனுமதிப் பத்திர விதிமுறைகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சட்டவிரோமாக மணல் ஏற்றி இறக்குவதில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றினால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மணல் போக்குவரத்து தொடர்பில் உள்ள அனுமதிப் பத்திர முறையை ரத்துச் செய்ய கடந்த தினம் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் ரிட் கட்டளையொன்றை வெளியிடுமாறு கோரி சுற்றுச்சூழல் நீதி மையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று மன்றில் பரிசீலனை செய்யப்பட்டது.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டீ. நவாஸ் மற்றும் சோஹித ராஜ கருணா ஆகிய நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மனு மீதான பரிசீலனை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பதவி விலகினார் கலாநிதி குருபரன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கலாநிதி குமாரவடிவேல் குருபரன் யாழ். பல்கலைக்கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகுவதற்கான இராஜினாமாக் கடிதத்தை இன்று வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு, கலைப் பீடாதிபதி மற்றும் சட்டத் துறைத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்திருக்கிறார்.

தான் பதவி விலகுவதற்கான காரணமாக பல்கலைக்கழக பேரவை தன்னை சட்டத் தொழிலில் ஈடுபடுவதில் இருந்து தடை செய்துள்ளமையைக் காட்டியுள்ளார்.

தன்னால் உயர் நீதிமன்றில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு பல்வேறு காரணங்களுக்காக விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்கத் தான் இவ்விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்றும், தொடர்ந்து தனது வாழ்வில் நிச்சயத்தன்மை இல்லாதிருக்கத் தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும், தனது இராஜினாமாக் கடிதத்தில் கலாநிதி குருபரன் குறிப்பிட்டுள்ளர்.

நடைமுறை அனுபவம் இல்லாத ஓர் சட்ட ஆசிரியராகத் தான் கடமையாற்றுவது இயலாத விடயமென்றும் தனது சட்டத் தொழில் மூலம் தான் செய்து வந்த சமூக பங்களிப்பும் ஊடாட்டமும் தனது ஆசிரியப் பணியில் இணை பிரியா அங்கம் என்றும், அது இல்லாத சட்ட ஆசிரியர் பணியில் தனக்கு ஈடுபடுவது திருப்தியை தர மாட்டாது என்றும் கலாநிதி குருபரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத் தொழிலில் ஈடுபடுவது கூடிய வருமானத்தை தரும் என்ற காரணத்திற்காகத் தான் இந்த முடிவை எடுக்கவில்லை என்றும், அவ்வாறாக எடுப்பதாயின் தான் அதனை 2010 யிலேயே அந்த முடிவை எடுத்திருந்துப்பேன் என்றும், வகுப்பறையில் மட்டும் முடங்கியிருக்கும் ஆசிரியராகக் கடமையாற்றத் தான் தயாரில்லை என்றும் குருபரன் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிடுகிறார்.

தன் மீது விதிக்கப்பட்ட தடை பல்கலைக்கழகம் சுயாதீனத்தை முழுவதுமாக இழந்துவிட்டதுக்கான முக்கியமான சான்று என்றும், தனது நலன்கள் தொடர்பில் சுயமாக முடிவு எடுக்க முடியாத பல்கலைக்கழகம் யாருக்காக செயற்படுகின்றது என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்.

நல்லாட்சி, சட்டத்தின் பாலான ஆளுகை, சுயாதீனம் ஆகியவற்றை தொலைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நல்லாசிரியர்களை ஈர்க்கவும் முடியாமல் தொடர்ந்து வைத்திருக்கவும் முடியாமல் நலிவடைந்து கொண்டிருப்பதாக கலாநிதி குருபரன் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

சட்டக் கல்வி மீதான தனது ஆர்வத்தை ஒரு போதும் கைவிடப் போவதில்லை எனத் தனது கடிதத்தில் கூறும் குருபரன், உயர் நீதிமன்ற வழக்கை தொடர்ந்து கொண்டு நடத்தப் போவதாகவும் தனக்கு சார்பாக கட்டளை ஆக்கும் பட்சத்தில் மீள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உள்நுழைய விண்ணப்பிப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறையின் இடைவிடா இயங்குகைக்கு தேவையான, இயலுமான ஒத்தாசைகளைத் தான் வழங்குவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவிலிருந்து மீள்பவர்கள் எண்ணிக்கை உலக நாடுகளிலேயே இந்தியாவில்தான் அதிகம்

## ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி தெரிவிப்பு

ஐ.நா. சபையின் பொருளாதார மற்றும் சமூக கவுன்ஸிலின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காணொலி மூலம் உரையாற்றினார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில், தற்காலிக உறுப்பினராக இந்தியா ஒரு மனதாகத் தேர்வான நிலையில் இந்த உரையை அவர் ஆற்றினார். இதில் அவர் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

கொரோனா தடுப்பு பணிகளில், உலகிற்கே முன்மாதிரியாக விளங்குகிறது. அனைவருக்கும், அனைத்திலும் வளர்ச்சி என்ற உன்னத நோக்கத்தோடு இந்திய அரசு இயங்குகிறது. 50 கோடி இந்தியர்களை உள்ளடக்கிய மிகப்பெரிய காப்பீட்டுத் திட்டத்தை இந்தியா செயல்படுத்துகிறது. 40 கோடி வங்கி கணக்குகளில், 22 கோடி வங்கி கணக்குகள் பெண்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் (ஆகச்சிறந்த)கொரோனாத் தடுப்பு பணிகளால், பெருந்தொற்று பாதிப்பிலிருந்து குணமடைவோர் அதிகரிப்பு. உலக நாடுகளிலேயே கொரோனாவிலிருந்து மீள்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகம்

குணமடைவோர் எண்ணிக்கை அதிகரிக்க மிக முக்கிய காரணம், இந்திய சுகாதாரத்துறையின் தீவிர நடவடிக்கைகள் ஆகும். இந்திய சுகாதாரத்துறையின் மேம்பட்ட கட்டமைப்புகளால், உலகளவில் கொரோனாவிலிருந்து மீள்பவர்கள் எண்ணிக்கை அதிகம்.

2022ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் அனைவருக்கும் வீடு திட்டம் நிறைவேற்றப்படும். வருகிற 2025ஆம் ஆண்டுக்குள், இந்தியாவிலிருந்து காசநோயை முற்றிலுமாக ஒழிக்க உறுதிபூண்டுள்ளோம்.

கொரோனாத் தடுப்புப் பணியை, மக்கள் இயக்கமாக மாற்றி, பெருந்தொற்றுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி கண்டுள்ளோம்.

ரூ.20 லட்சம் கோடி மதிப்பிலான சுயசார்பு பாரதம் திட்டத்தின் மூலம், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

"சுயசார்பு பாரதம் திட்டத்தின் மூலம் உள்ளூர் சந்தையை உலகளாவிய சந்தை போட்டிக்கு தயார்படுத்தியிருக்கிறோம்.




# இந்தியாவின் தயாரிப்பான தடுப்பு மருந்து 'கோவாக்சின்' மனிதர்கள் மீது சோதனை

கொரோனாவைக் குணப்படுத்த இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள கோவாக்சின் தடுப்பு மருந்தின் மனிதர்கள் மீதான சோதனை தொடங்கியுள்ளது.

அரியானாவின் ரோத்தக் மருத்துவமனையில் மூவருக்குச் சோதனை முறையில் இந்த மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

ஐதராபாத்தைச் சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனம், இந்திய மருத்து வ ஆராய்ச்சிக் கவுன்ஸில் ஆகியவை இணைந்து கொரோனாவைக் குணப்படுத்த கோவாக்சின் என்னும் மருந்தைத் தயாரித்துள்ளன.

இந்த மருந்தை மனிதர்களுக்குச் செலுத்திச் சோதிக்க இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் வழங்கியது.

பாட்னா எய்ம்ஸ் மருத்துவமனை உள்ளிட்ட 12 இடங்களில் சோதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி முதன்முறையாக நேற்று அரியானாவின் ரோத்தக்கில் உள்ள மருத்துவமனையில் மூவருக்கு கோவாக்சின் மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மூவரும் மருந்தை ஏற்றுக் கொண்டனர் எனவும், எந்த எதிர்விளைவுகளும் இல்லை எனவும் அரியானா நல வாழ்வுத் துறை அமைச்சர் அனில் விஜ் தெரிவித்துள்ளார்.




# இந்தியாவின் ஓர் அங்குல நிலத்தைக் கூட எந்த சக்தியாலும் அபகரித்து விட முடியாது

## பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சூளுரை



இந்திய - சீன எல்லையில் உள்ள லடாக் பகுதிக்குச் சென்ற இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், அங்கு முன்களப் பகுதிகளில் பாதுகாப்பு நிலைவரம் குறித்து ஆய்வு செய்தார். உலகின் எந்த சக்தியாலும், இந்தியாவின் ஓர் அங்குல நிலத்தைக் கூட அபகரித்து விட முடியாது எனத். திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 2 நாள் பயணமாக லடாக் மற்றும் ஜம்மு - காஷ்மீர் சென்றுள்ளார். இன்று காலை லே விமான நிலையம் சென்று இறங்கிய அவர், முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், ராணுவ தளபதி மனோஜ் நரவானே ஆகியோருடன், ஸ்டக்னா **(Stakna)** என்ற முன்களப் பகுதிக்கு சென்றார். அங்கு, அவர் முன்னிலையில், டி -90 பீஷ்மா டாங்குகள் இயக்கிக் காட்டப்பட்டது.

இந்த டி - 90 பீஷ்மா டாங்குகள், கால்வன் பள்ளத்தாக்கு மோதலைத் தொடர்ந்து, அப்பகுதிக்கு கடந்த ஜூன் மாதத்தில் கொண்டு செல்லப்பட்டன. சீன இராணுவம் எல்லைக்கு அருகே படைநிலைகளை வலுப்படுத்தியதைத் தொடர்ந்து, அதற்கு பதிலடியாக இந்தியாவும் கனரக ஆயுத தளவாடங்களை நகர்த்தியது.

அதில், டி -90 பீஷ்மா டாங்குகள் முக்கியமாக இடம் பெற்றன. அவற்றின் வல்லமையை தெரிவிக்கும் வகையில், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் இயக்கிக் காட்டப்பட்டன. யனிஊண ரக பீரங்கி -கவச வாகனங்கள் உள்ளிட்டவற்றின் பயிற்சியையும் பாதுகாப்பு அமைச்சர் பார்வையிட்டார்.

பின்னர் வீரர்கள் பயன்படுத்தும் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் குறித்து ராஜ்நாத் சிங்கிற்கு விளக்கப்பட்டது. அப்போது ஊஷ்வழி எந்திரத் துப்பாக்கியை, பாதுகாப்பு அமைச்சர் சோதித்துப் பார்த்தார். எல்லைகளை பாதுகாத்து நிற்கும் வீரர்கள் பாராசூட் மூலம் குதித்து திறமைகளை வெளிப்படுத்தினர். போரில் பயன்படுத்தப்படும் ஹெலிக்கொப்டர்களையும் ராஜ்நாத் சிங் பார்வையிட்டார்.

இதைத் தொடர்ந்து, லடாக்கின் லூக்குங் பகுதிக்கு சென்ற ராஜ்நாத் சிங், படை வீரர்களுடன் கலந்துரையாடி, அவர்கள் மத்தியில் உரையாற்றினார். இந்திய - சீன வீரர்களிடை ஏற்பட்ட மோதலைச் சுட்டிக்காட்டிப் பேசிய அவர், எல்லையை பாதுகாக்கும் உன்னதப் பணியில் இந்திய வீரர்கள் உயிர்த்தியாகம் செய்ததாக குறிப்பிட்டார்.

வீரர்களின் உயிரிழப்பு துயரத்தை ஏற்படுத்துகிறது என்றும், வீரமரணம் அடைந்த அந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துதாகவும் ராஜ்நாத் சிங் கூறினார். உலகின் எந்தச் சக்தியாலும், இந்தியாவின் ஓர் அங்குல நிலத்தைக் கூட அபகரித்து விட முடியாது என திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

லடாக் பயணத்தை முடித்துக் கொண்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஸ்ரீநகர் புறப்பட்டுச் சென்றார். ஜம்மு - காஷ்மீரில் நாளை முன்களப் பகுதிகளை ஆய்வு செய்ய உள்ளார்.

# இந்தியாவிலேயே பணக்காரப் பெண்மணி 38 வயதில் தலைவரான ரோஷினி நாடார்



உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் எச்.சி.எல். நிறுவனத்தின் புதிய தலைவராக ரோஷினி நாடார் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த சிவநாடாருக்கு சொந்தமான ஹிந்துஸ்தான் டெக்னாலஜிஸ் நிறுவனம் இந்தியாவின் நான்காவது மிகப் பெரிய ஐ.டி. நிறுவனமாகும். இந்த நிறுவனத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 287 ஊழியர்கள் பணி புரிகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் கோடி சொத்து மதிப்பு கொண்ட எச்.சி.எல். நிறுவனத்தின் தலைவராக சிவநாடார் இருந்து வந்தார். இந்த நிலையில், சிவநாடாரின் மகள் ரோஷினி நாடார் மல்கோத்ரா நேற்று எச்.சி.எல்லின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதே வேளையில், சிவ நாடார் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை வியூக வடிவமைப்பாளர் என்ற புதிய பொறுப்புடன் எச்.சி.எல். நிறுவனத்தில் செயல்படுவார். இதுநாள் வரை, ரோஷினி நாடார் எச்.சி.எல். கோர்ப்பரேசன் நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் எச்.சி.எல் டெக்னாலஜிநிறுவனத்தின் துணைத் தலைவராகவும் இருந்து வந்தார். சென்னையில் உள்ள சிவ சுப்ரமணிய நாடார் இன்ஜினியரிங் கல்லூரியை நடத்தி வரும் சிவநாடார் அறக்கட்டளையில் உறுப்பினராவும் ரோஷினி நாடார் உள்ளார்.

கடந்த 2019ஆ ம் ஆண்டு **IIFL Wealth Hurun India** வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி இந்தியாவிலேயே பணக்கார பெண் ரோஷினி நாடார் ஆவார். இவரின் மொத்த சொத்து மதிப்பு 31 ஆயிரத்து 400 கோடி ரூபா ஆகும். கடந்த 2017, 2018, 2019 ஆண்டுகளில் தொடர்ச்சியாக போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்ட 100 செல்வாக்குமிக்க பெண்கள் பட்டியலில் ரோஷினி இடம் பெற்றிருந்தார். டெல்லியில் பிறந்த ரோஷினி, அமெரிக்காவின் **Kellogg School of Management**, பல்கலையில் எம்.பி.ஏ. பட்டம் பெற்றவர். தற்போது, 38 வயதாகும் ரோஷினியின் கணவரின் பெயர் ஷிக்தர் மல்கோத்ரா. 'இந்த தம்பதிக்கு இரு குழந்தைகள் உள்ளனர்.

வர்த்தகம் தவிர பெண்கள் மேம்பாடு, வனஉயிரின பாதுகாப்பு போன்றவற்றில் அக்கறை கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் ரோஷினி நாடார்.

# கொரோனா பரவினால்தான் மக்களைக் காக்க முடியும்: அதனால் ஊரடங்கை நடைமுறைப்படுத்தாத ஸ்வீடன்!

## அதன் திட்டம் சாதித்ததா? அல்லது சறுக்கியதா?



கொள்ளை நோயாகப் பரவி, பெரும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது, கொரோனா நோய்த் தொற்று. ஒவ்வொரு நாட்டிலும் கால நிலைக்கு ஏற்ப வடிவத்தை மாற்றி மக்களைக் கொல்கிறது கொரோனா. மக்கள் கதவுகளை அடைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். பஸ், ரயில், விமானம் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து முற்றிலும் முடங்கிப் போயின. கொரோனா வைரஸை பிடியில் இருந்து மக்களைக் காப்பாற்ற உலகம் கையில் எடுத்திருக்கும் ஆயுதம் தான் ‘ஊரடங்கு’. உலகமே கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கை அமல்படுத்திய போது, ஒரு நாடு மட்டும் ‘நாங்கள் ஊரடங்கை அமல்படுத்தப் போவதில்லை’ என்று அறிவித்தது. அந்த நாடுதான் ஸ்வீடன்.

பொதுவாக, நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தடுப்பூசி போட்டு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்வது. இரண்டாவது, அந்த நோய் தாக்கி, உடலில் இயல்பிலேயே நோய்த் தொற்றுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி தோன்றுவது. இதில், இரண்டாவது வழிமுறையைக் கையில் எடுத்தது ஸ்வீடன். வித்தியாசமான யுக்தியாக, சமுதாய நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவது (Herd immunity) எனும் திட்டத்தைச் செயல்படுத்தியது.

’ஒரு நாட்டில் 60 சதவீதத்துக்கும் அதிகமான மக்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு, எதிர்ப்பு சக்தி தோன்றிவிட்டால் அங்கு நோய் பரவல் ஏற்படாது’ என்கிற கருத்து மருத்துவத்துறையில் உண்டு. இதை சமுதாய நோய் எதிர்ப்பு சக்தி (Herd immunity) என்று கூறுவர். முள்ளை முள்ளால் எடுக்கும் உத்தி இது. இந்த யுக்தியால் கொரோனாவை வீழ்த்தியதா ஸ்வீடன் என்றால் இரு வேறு முடிகளை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

### புள்ளி விவரங்கள் என்ன சொல்கின் றன?

சமுதாயத்தில் 60 சதவீதத்துக்கும் அதிகமான மக்களுக்கு நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட வேண்டும் என்று கருதிய ஸ்வீடன் அரசு ஊரடங்கை முறையாக அறிவிக்கவில்லை. வயது முதிர்ந்தவர்கள் மட்டும் வீடுகளிலும், முதியோர் இல்லங்களிலும் பாதுகாப்பாகத் தனிமைப் படுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியது. மற்றபடி எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், மோல்கள் அனைத்தும் இயங்கின. விழாக்களில் பங்கேற்கக் கூட 50 பேர் வரை கூட அனுமதி வழங்கப்பட்டது. இதனால், அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் கொரோனாவால் ஸ்வீடனில் அதிக பாதிப்பு ஏற்பட்டது.

அண்டைநாடுகளுடன் ஒப்பிடுகையில் ஸ்வீடனில் கொரோனா பாதிப்பு விகிதமும், இறப்பு விகிதமும் பலமடங்கு அதிகமாகவே உள்ளன. ஒருகோடி பேரை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்ட ஸ்வீடனில் இதுவரை கொரோனா நோய் தாக்குதலால் 76,877 பேர் பாதிக்கப்பட்டு, 5,593 பேர் இறந்துள்ளனர். நாட்டின் மொத்த மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில், உலகிலேயே ஸ்வீடனில்தான் இறப்பு விகிதம் அதிகம் என்கின்றன புள்ளி விவரங்கள்.

அமெரிக்காவில் இதுவரை 1,38,000 பேருக்கும்மேல்இறந்துள்ளனர். ஸ்வீடனில் 5,593பேர் இறந்துள்ளனர். எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் ஸ்வீடனில் இறப்பு விகிதம் குறைவாகவே தோன்றும். ஆனால், நாட்டின் மொத்த மக்கள் தொகையின் அடிப்படையில் ஆராய்ந்தால் இந்த பாதிப்பு மிக அதிகம். 10 லட்சம் பேருக்கு ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையை ஆராய்ந்தால், ஸ்வீடன் நாட்டில் அமெரிக்காவை விட 40 மடங்கு, நோர்வேயை விட 12 மடங்கு, பின்லாந்தை விட 7 மடங்கு, டென்மார்க்கை விட 6 மடங்கு அதிக அளவில் இறப்பு பதிவாகியுள்ளது. இது கவலை தரக்கூடிய வியமாகும்.

ஸ்வீடன் அரசு ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தாததற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அதுதான் பொருளாதாரம். ஆனால், பொருளாதாரத்தையும் அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. ஸ்வீடன் மத்திய வங்கியின் புள்ளிவிவரத்தின் படி, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.5 சதவிகிதமாக சுருங்கியுள்ளது. இதற்கு முன்பு , அதன் உள்நாட்டு உற்பத்தி 1.3 சதவிகிதம் உயரும் என்று மதிப்பிடப்பட்டது. கணிப்புக்கு மாறாகத் தற்போது பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது. வேலையின்மை 7.1 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இது எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகம் என்று சொல்லப்பட்டுள்ளது

வொஷிங்கடன் பீட்டர்சன் சர்வதேச பொருளாதார நிறுவனத்தின் பொருளாதார நிபுணர் ஜேகப், ஊரடங்கை அமல்படுத்தாததால் ஸ்வீடன் உண்மையில் எந்த ஆதாயத்தையும் பெறவில்லை. ஸ்வீடன்நாட்டுஅரசேதங்கள் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எந்த பொருளாதார லாபத்தையும் அவர்கள் பெறவில்லை என்று கூறுகிறார்.

ஸ்வீடன் நாட்டின் மாறுபட்ட அணுகுமுறையால், தற்போது அந்த நாட்டில் பாதிப்பு குறைந்து வருவதைப் புள்ளி விவரத்தின் மூலம் அறிய முடிகிறது. ஏப்ரல் மாதத்தில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தனர். அதன்பிறகு , இறப்பு விகிதம் சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் ஒற்றை இலக்கத்தில் தான் இறப்பு ஏற்பட்டு வருகிறது. ஜூன் மாதத்தில் அதிகமாக ஏற்பட்ட நோய்த் தொற்று பரவல் வேகம் தற்போது குறைந்து வருவதாகப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

கொரோனாவுக்கு எதிரான போரில் உலகமே ஒரு பாதையில் செல்ல, ஸ்வீடன் வேறொரு பாதையில் பயணித்தது. தற்போது பாதிப்பு விகிதம் குறைந்துள்ளதால், அந்த நாட்டு அரசு சற்று நிம்மதியடைந்துள்ளது.

# தங்கையைக் காப்பாற்ற நாயுடன் போராடிய வீரச்சிறுவன் முகத்தில் 90 தையல்களுடன்போது ஆஸ்பத்திரியில்!

## உலகம் முழுவதிலிருந்தும் பாராட்டுகள் குவிகின்றன

அமெரிக்காவில் 4 வயது தங்கையை காப்பாற்ற நாயிடம் போராடிய சிறுவனின் முகத்தில் 90 தையல்கள் போடப்பட்டுள்ளன. தங்கையை உயிரைப் பணயம் வைத்து காப்பாற்றியதற்காக, சிறுவனுக்கு உலகம் முழுவதுமிருந்து பாராட்டுகளும் வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன.

வியோமின் மாகாணத்திலுள்ள Cheyenne நகரில் கடந்த ஜூலை 9 ஆம் திகதி தெருவில் நடந்து கொண்டிருந்த நான்கு வயது சிறுமியை ஜெர்மன் ப்பெர்ட் நாய் ஒன்று கடிக்கப் பாய்ந்துள்ளது.

இந்தச் சமயத்தில் குறுக்கே பாய்ந்த சிறுமியின் சகோதரன் பிரிட்ஜர் வாக்கர் நாயுடன் போராடி தங்கையைக் காப்பாற்றியுள்ளான் ஆனால், இந்த போராட்டத்தில் சிறுவனின் முகத்தில் நாய் பல முறை கடித்து விட்டது. இருந்தாலும் கடைசி வரை போராடிய சிறுவன் தன் தங்கையை நாயிடத்தில் இருந்து மீட்டெடுத்தான். பிறகு, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவனுக்கு 2 மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. முகத்தில் 90 தையல்கள் போடப்பட்டன. தீவிர சிகிச்சை காரணமாக சிறுவன் உயிர் பிழைத்து வீடு திரும்பினான். இந்த சம்பவம் குறித்து ”எங்கள் இருவரில் யாராவது ஒருவர் பலியாக வேண்டுமென்றால் அது நானாகத்தான் இருக்க வேண்டும் ” என்று தன் தந்தையிடமும் பிரிட்ஜர் வாக்கர் கூறியிருக்கிறான். தங்கை மீது அவனுக்கு அவ்வளவு பாசம்.

பிரிட்ஜர் வாக்கர் வீடு திரும்பியதும் அவனின் அத்தை நிக்கி வாக்கர் . சிறுவனின் முகத்தில் காயங்களுடன் இருக்கும் புகைப்படத்தை தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டார். அதில், “எங்கள் வீட்டு ஹீரோ இவன்தான், கோர முகம் காட்டிய நாயிடத்திலிருந்து தங்கையை காப்பாற்றிக் கையில் தூக்கிக் கொண்டு ஓடி தப்பித்தவன். இப்போது 90 தையல்களுடன் வீட்டில் ஓய்வெடுத்து வருகிறான். எங்கள் குடும்பத்தின் துணிச்சலான இந்தப் பையன் பற்றி அனைத்து சூப்பர் ஹீரோக்களும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தற்போது முகத்தில் ஏற்பட்டுள்ள காயங்களால் அவனால் சரிவர சிரிக்க கூட முடியவில்லை. ஆனால், பிரிட்ஜர் வாக்கரின் மன அழகு அலாதியானது. இந்த சம்பவத்தால், நாயின் உரிமையாளர்களுக்கும் எங்கள் குடும்பத்துக்கும் எந்த மனக்கசப்பும் இல்லை. இந்தசம்பவத்தால் எங்கள் இரு குடும்பங்களும் அன்பினால் இணைந்துள்ளன. பிரிட்ஜரின் செயலுக்கான அவனை பாராட்டி சொல்லப்படும் கருத்துகள் உற்சாகமளிக்கின்றன” - என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த இன்ஸ்டாகிராம் பதிவு வைரலனதையடுத்து, பல பிரபலங்கள் சிறுவனுக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவித்து வருகின்றனர்.

அவெஞ்சர் நாயகன் கிறிஸ் இவான்ஸ் சிறுவனுக்கு அனுப்பிய வீடியோ மெசெஜில் . ” உன்னைப் போன்ற ஒருவனை சகோதரனாக அடைய உன் தங்கை கொடுத்து வைத்திருக்க வேண்டும். உன்னை பெற்றதற்காக உன் பெற்றோர் பெருமையடைவார்கள். என்னிடத்திலுள்ள கேப்டன் ஆஃப் அமெரிக்கா ஷீல்டை உனக்கு உறுதியாக அனுப்பி வைக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

ஹொலிவுட் நடிகை Anne Hathaway, உள்ளிட்ட ஹொலிவுட் பிரபலங்களும் சிறுவனுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

# ஸ்பெயின் கடற்கரைகளில் குப்பைகளை சேகரிக்கும் நடவடிக்கையில் கழுதைகள்



*ஸ்பெயினில் கடற்கரைகளைச் சுத்தம் செய்யும் பணியில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுடன் கழுதைகளும் ஈடுபட்டுள்ளன.*

*ஹூல்வா மாகாணத்தின் மாதலாஸ் கானாஸ் கடற்கரையில் உள்ள பிளாஸ்டிக் குப்பைகளை கழுதை மீது கட்டப்பட்டுள்ள கூடைகளில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சேகரித்து வருகின்றனர்.*

*வாகனங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு இதனால் தவிர்க்கப்படுவதாகவும், கழுதைகள் இந்த பணியில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றன எனவும் ஒருங்கிணைப்பாளர் மரியா ஜெசிகா ஹெரேடியா சால்வடோர் தெரிவித்துள்ளார்.*

*தன்னார்வலர்கள் நாள் ஒன்றுக்கு சில மணி நேரங்களில் 20க்கும் மேற்பட்ட பெரிய பைகளில் குப்பைகளை சேகரிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

காலைக்கதிர் Kalaikkathir

# வெற்றியோ – தோல்வியோ அரசியலை விட்டு ஓடும் எண்ணம் எனக்கில்லை!

## 'கோமாளி கிங்' பவதாரணி

தேர்தல் வியூகம்

செவ்வி கண்டவர்கள் :-
பிரபாகரன் டிலக்ஸன்,
இராமச்சந்திரன் கலையமுதன்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் வெல்வது உறுதி. சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் தோற்றுப் போனாலும், மக்களை விட்டு ஓடப்போவதில்லை. தேர்தலில் வெற்றி பெறத் தவறும் 323 வேட்பாளர்களையும் கூட்டுச் சேர்த்து மக்களுக்கான பணிகளில் குதிப்பேன் என்று ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டப் பெண் வேட்பாளர் பவதாரணி இராஜசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

காலைக்கதிர் பத்திரிகையின் தேர்தல் வியூகம் பகுதிக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவருடனான செவ்வியின் முழு வடிவம் வருமாறு :

**கேள்வி :** உங்களைப் பற்றி..... ?

**பதில்:** தொழில் முறையில் நான் ஒரு கணக்காளர். தொழிலதிபர் ஒருவரைத் திருமணம் செய்த பின்னர் நானும் தொழில் முயற்சியில் ஈடுபட்டேன். அனைவருக்கும் ஆரோக்கியமான உணவு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக ஆரோக்கியா இன்டர்நேனல் என்ற நிறுவனத்தை உருவாக்கி சத்தான உணவுகளை மக்களுக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன்.

கலைத்துறையில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. சிறு பராயம் முதல் பரதத்தில் ஆர்வமுடன் ஈடுபட்டு வந்த எனக்கு சினிமாவிலும் ஈடுபாடு உண்டு. இலங்கையில் 40 வருடங்களுக்குப் பின்னர் வெற்றிகரமாகத் திரைகண்ட கோமாளி கிங்க்ஸ் முழு நீளத்திரைப்படம் எனது தயாரிப்பிலேயே வெளிவந்தது.

எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் சிறக்க பாலர் பாடசாலைகள் வலுப்பெற வேண்டும் என எண்ணினேன். அதனால் கடந்த 5 வருடங்கள் பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தில் என்னை இணைத்து கொண்டேன். பாலர் பாடசாலை ஆசிரியர்களின் பிரச்சினைகளை அதிகார மட்டங்களுக்கு கொண்டு சென்று அவற்றினை நிவர்த்தி செய்துள்ளேன். 11 உறுப்பினர்களுடன் தொடங்கிய பாலர் பாடசாலை ஆசிரியர் சமூகத்தில் இன்று 38 ஆயிரம் ஆசிரியர்கள் இணைந்திருக்கிறார்கள். இது ஒன்றே போதும் என் அடையாளத்தைச் சொல்வதற்கு.

> ❝ அனுதாபத்தை வைத்து அரசியல் செய்வதை நான் விரும்பவில்லை. ❞

**கேள்வி :- உங்கள் அரசியல் பிரவேசம் பற்றி.....?**

**பதில் :** அரசியலில் நான் விரும்பி வந்தவள் இல்லை. நான் அரசியல் பிரவேசத்துக்குள் அழைக்கப்பட்டேன். 16 வருடங்களாக நேரடி அரசியலில் ஈடுபடவில்லை என்றாலும், அரசியல் வட்டத்துக்குள்தான் இருந்தேன். ஆனால் கூட வேட்பாளராக வரவேண்டும் என்று நான் எப்போதும் நினைத்தது இல்லை.

வேறு கட்சிகளிலிருந்தும், ஶ்ரீலங்கா சுகந்திரக் கட்சியில் இருந்தும் இந்த வருடம் மார்ச் மாதம் வேட்பாளராக வருமாறு எனக்கு அழைப்பு வந்தது. ஶ்ரீலங்கா சுத்ந்திரக் கட்சியின்அழைப்பை நிராகரிக்க முடியாமல் அரசியலுக்குள் வந்தேன்.

**கேள்வி : இந்தத் தேர்தலில் நீங்கள் வெல்வீர்களா? வென்றால், அந்த வெற்றியின் ஊடாக நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன ?**

பதில் : இந்தத் தேர்தலுக்காக மக்களோடு கலந்துரையாடிய போது, மக்களுக்கு தேவையானபலஅடிப்படைத்தேவைகளைஉணர்ந்து கொண்டேன். வீடு, நீர், மின்சாரம் போன்ற அடிப்படை பிரச்சினைகளே அனேகமான மக்களிடம் பொதுவாகக் காணப்படுகின்றன. அவைதான் மக்களுக்கு மிக, மிக அவசியமானவை – அடிப்படைத் தேவைகள். நான் வெற்றி பெற்றாலோ, பெறாது விட்டாலோ மக்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பேன்.

நான் எப்போதும் மக்களுடனேயே பயணிப்பேன். மக்களின் 70 சதவீதமான பிரச்சினைகள் கிராம சேவகர் மட்டத்திலேயே தீர்க்கப்படக் கூடியவை. அவற்றுக்கு எதற்கு அதிகாரம்? மீதி 30 வீதமான பிரச்சினைகளே உயர் மட்டங்களினால் தீர்த்துவைக்கக் கூடியதாக உள்ளன.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ யாழ். மாவட்டத்தில் இருந்து 7 பேர் மட்டும்தான் வெற்றி பெற்று நடாளுமன்றத்துக்குச் செல்ல முடியும். எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற 330 போரில் ஏழு பேர் வெற்றி பெறப் போகின்றார்கள். மீதமுள்ள 323 பேரும் இணைந்து மக்களுக்கு சேவையாற்றினாலே மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டுவரமுடியும். தேர்தலில் வெற்றி பெறத் தவறும் 323 வேட்பாளர்களையும் கூட்டுச் சேர்த்து நான் மக்களுக்கான பணிகளில் குதிப்பேன்.

**கேள்வி: இங்குள்ள கட்சிகள் மேல் பொதுவாக முன்வைக்கப்படுகின்ற ஒரு குற்றச்சாட்டு வேட்பாளர்கள் கொழும்பு இறக்குமதிகளாக உள்ளனர் என்பது. அது பற்றிய உங்கள் கருத்து?**

பதில் : யாழ்ப்பாணத் தேர்தல் மாவடடத்துக்குரிய வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து தான் வர வேண்டும் என நினைத்தால், எமது பிரச்சனைகளை இலங்கைக்கு வெளியில் இருந்து யாராவது பேசுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்க கூடாது. எமது பிரச்சினைகளுக்கான தீர்வைக்கூட சர்வதேசத்திடம் நாம் எதிர்பார்க்கக் கூடாது. யார் எங்கிருந்து வந்தாலும், மக்களுக்கான சேவைகளை மேற்கொண்டால் சரி என்பதே எனது நிலைப்பாடு. இங்கு இருப்பவர்கள் சரியாக செயற்பட்டிருந்தால் கொழும்பு இறக்குமதிகள் பற்றி நாம் கதைத்திருக்கவே தேவையில்லை.

**கேள்வி: ரீலங்கா சுகந்திரக் கட்சிக்கு இம்முறை யாழ்ப்பாணத்தில் எத்தனை ஆசனங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

பதில்: நாங்கள் இம்முறை மூன்று ஆசனங்களை எதிர்பார்க்கின்றோம்.



**கேள்வி: ஒருவேளை தேர்தலில் உங்களுக்கு வெற்றி உறுதிப்படுத்தப்படாது விட்டால் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற ஆசனத்தைப் பெறுவீர்களா?**

பதில் – எனக்கு தேசியப்பட்டியல் கொடுப்பதா, இல்லையா என்பதைக் கட்சியே தீர்மானிக்கும். அவ்வாறானதொரு சந்தர்பம் கிடைத்தால், அதனை பயன்படுத்தி மக்களுக்குச் சேவையாற்றத் தயாராக உள்ளேன். வெற்றி பெற்றாலும், தோல்வி அடைந்தாலும் இங்கிருந்து மக்களுக்குத் தொடர்ந்தும் சேவையாற்றுவேன். நான் நாடாளுமன்றம் செல்ல முடியாது விட்டாலும் எமது கட்சி சார்பாக நாடாளுமன்றம் செல்லும் மூவர் மூலம் நான் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன். அந்த வல்லமை எனக்கு உண்டு.

**கேள்வி: தேர்தல் விதிமுமைகளை மீறி ஶ்ரீலங்கா சுகந்திரக் கட்சி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், அரசாங்க உதவிகளைக் கட்சியின் உறுப்பினர் மேற்கொண்டதாக காட்டியதாகவும், வேலைவாய்ப்புக்கு உள்வாங்கப் பட்டவர்களை கட்சியின் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறதே?**

பதில் : இதில் ஒரு முறைப்பாடு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. வேலைவாய்ப்புக்கு உள்வாங்கப்பட்டவர்களை தேர்தல் பிரச்சாரங்களுக்கு பயண்படுத்துவதை நான் இன்று – நீங்கள் கேட்டுத் தான் அறிகின்றேன். அதைப்பற்றி அறியாமல் பதில் கூற என்னால் முடியாது.

**கேள்வி : நிறைவாக, மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில் : இம்முறை எல்லாக் கட்சிகளிலும் பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். திருமதி விஜயகலா மகேஸ்வரன், திருமதி சசிகலா இரவிராஜ் ஆகிய அனைவரும் தங்கள், தங்கள் இழப்புக்களைக் காட்டி வாக்குச் சேர்க்கப் பார்க்கிறார்கள். அவர்களின் இழப் புக்கள் ஈடுசெய்ய முடியாதவை. அவ்வாறு யாருக்கும் ஏற்பட்டு விடக்கூடாது. அதனை நான் ஆத்மார்த்தமாக மதிக்கிறேன். ஆனால் அனுதாபத்தை வைத்து அரசியல் செய்வதை நான் விரும்பவில்லை.

எனவே மக்கள் இந்தத் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். உங்களின் தேவைகளை வேறு ஒருவர் நிர்ணயிக்க விடாதீர்கள். உங்கள் தேவைகளை நீங்களே ஆணித்தரமாக முன்வையுங்கள். வாக்கு உங்கள் உரிமை.

> ❝ யார் எங்கிருந்து வந்தாலும், மக்களுக்கான சேவைகளை மேற்கொண்டால் சரி என்பதே எனது நிலைப்பாடு. இங்கு இருப்பவர்கள் சரியாக செயற்பட்டிருந்தால் கொழும்பு இறக்குமதிகள் பற்றி நாம் கதைத்திருக்கவே தேவையில்லை. ❞

# அரசாங்க சார்புக் கட்சிகளுக்குள் தமிழ்க் கூட்டமைப்பும் அடங்கும்!



## இப்படிக் கூறுகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

அரசாங்க சார்புக் கட்சிகள் எனும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனுள் அடங்கும் என்று கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

வடமராட்சிகிழக்கு உடுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :-

இம் முறை நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் முக்கியமானது. இனி இணக்க அரசியலுக்கு இடமில்லை. நாம் கொள்கை ரீதியாக எமது பாதையை வகுத்து அதில் நாட்டமுடனும் நேர்மையுடனும் பயணிக்க வேண்டியுள்ளது.

அதன் போது பல சிக்கல்களுக்கு நாம் முகம் கொடுக்க நேரிடும். தற்போது எம் மக்களின் மனதில் பயத்தை ஊட்டவல்லதாக இருப்பது எம் மத்தியில் விரிவுபடுத்தப்பட்டு வரும் இராணுவப் பிரசன்னமே.

பலவேட்பாளர்களின் வீடுகளுக்குப் புலனாய்வு அதிகாரிகள் செல்கின்றார்கள். அங்கு அவர்கள் வேட்பாளர்களின் இதுவரையான பயணங்கள், இனிப் போகப் போகும் இடங்கள், கூட்டம் நடத்தத்திட்டமிட்டுள்ள இடங்கள் போன்ற பல விபரங்களைக் குறித்துக் கொண்டு செல்கின்றார்கள் என்று தெரிய வருகின்றது. இதனால் வேட்பாளர்கள் பயத்தில் இருக் கின்றார்கள் என்று கேள்வி. இவ்வாறான செயல்கள் மக்களை வாக்களிக்கச் செய்யவிடா.

அதுமட்டுமல்ல. பாதைகளில் பலவீதிச் சோதனைச் சாவடிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஜூலை 5ஆம் திகதி தேர்தல் ஆணையகத்தின் கிளிநொச்சித் தேர்தல் அலுவலர் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்தபோது இரு தடவைகள் நிறுத்தப்பட்டார். அவரின் மோட்டார் சைக்கிள் பின் பெட்டியைத் திறக்க அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். தேர்தல் ஆணையக அதிகாரிக்கே இந்த நிலை என்றால் பொதுமக்களின் பாடு எவ்வாறிருக்கும் என்று யூகிக்க முடியும். இத்தனைக்கும் இவ்வாறான அதிகாரம் பொலிஸருக்கே உண்டு. இராணுவத்தினருக்குக் கிடையாது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரே இராணுவத் தினருக்கு இவ்வாறானஅதிகாரங்கள் வந்து சேருவன. கொரோனாக் காரணத்தினால் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆகவே மக்களும் அதிகாரிகளும் மீண்டும் பயத்தில் வாழத் தொடங்கியுள்ளார்கள். இந்தப் பயம் தேர்தலைப் பாதிக்கக்கூடும்.

2013 இல் நான் வடமாகாணசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் காலத்தில் அரசாங்க சார்பு வேட்பாளர்களின் நன்மைக்காக அரச வளங்களைத் திட்டமிட்டுத் தவறான முறையில் பயன்படுத்தினார்கள். அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறித் தேர்தல் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. பல வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தலுக்கும் வன்முறைகளுக்கும் ஆளானார்கள். இவ்வாறு தேர்தல் சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டன. ஜனநாயகம் இந் நடவடிக்கைகளினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. காலை வெகுநேரம் வரையில் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குப் போகாது, போவதைத் தவிர்த்தனர். அப்போது ஆட்சியில் இருந்தவர்களின் ஆதரவாளர்கள் சட்டத்திற்குப் பயப்படாமல் குடாநாடு எங்கும் வலம் வந்தார்கள். வாக்குகளைச் சிதறடித்துத் தமிழ் மக்கள் சார்பான கட்சிகள் வெற்றியீட்டுவதைத் தவிர்ப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அப்படி இருந்தும் மக்கள் மிகச் சாதுர்யமாக வாக்களித்து என்னை 133,000க்கு மேலான வாக்குகளைப் பெறச் செய்து வெற்றி எய்திக் கொடுத்தார்கள். இன்ற அன்றைய அரசாங்கமே மீண்டும் வந்துள்ளது. அதுவும் அன்று இராணுவத்தை வழி நடத்தியவர் இன்றைய ஜனாதிபதி.

இம்முறை கொரோனா வேறு வந்துவிட்டது. மக்கள் நோய்க்குப் பயந்து வாக்களிக்காது இருந்தால் தமிழ் மக்களின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாய் ஆகிவிடும். ஏற்கனவே பல விதங்களில் வடக்கு, கிழக்கில் சிங்கள மயமாக்கலும் பௌத்த மயமாக்கலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தக்க கொள்கைகளுடன் செயலாற்றும், நேர்மையுள்ள, பயப்படாத வேட்பாளர்கள எமது மக்கள் தேர்ந்தெடுக்காவிட்டால் சென்ற 5 வருடங்களில் தமிழ்ச் சமூகம் பாதிப்படைந்தது போலவே மேலும் வருங்காலத்தில் பாதிப்படைய நேரும். ஆகவ நாங்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

நாம் தேர்தல் வாக்களிப்புக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இராணுவத்தை முகாம்களில் முடக்குமாறு கோரவிருக்கின்றோம். சட்டம், ஒழுங்கின் பாதுகாவலராய் பொலிஸாரை நியமிக்குமாறும் இராணுவத்தினரைத் திரும்ப எடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோரவிருக்கின்றோம். தேர்தல்களின் போது சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப் படைகளைப் பயன்படுத்துவதைச் சட்ட ரீதியாக நியாயப்படுத்த முடியாது. நாட்டின் உள்ளகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பொலிஸாருக்கு அரசமைப்பு மூலமான கடமை உள்ளது. அதுவும் தேர்தல்களின் போது அவர்களுக்குப் பல கடப்பாடுகள் உண்டு. ஆகவே பொலிஸாரின் செயற்பாடுகளைப் பலப்படுத்துவது சம்பந்தமாகவும் கோரவிருக்கின்றோம்.

அத்துடன் தேர்தல் ஆணையகம் சகல பாதுகாப்புப் பணிகளையும் பொலிஸார் மூலம் செய்யவேண்டிய ஒரு கடப்பாடுடையது. இதையும் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தவிருக்கின்றோம். அதற்காகப் பொலிஸார் மீது மக்களுக்குப் பெருமளவு நம்பிக்கை உள்ளதாகக் கொள்ளக் கூடாது. தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாப்புப் படைகள் மீது பரந்தளவில் அவநம்பிக்கையும் பயமும் இருப்பது போலவே பொலிஸார் மீதும் அவநம்பிக்கை உண்டு. ஆகவே இப்பொழுதிருந்தே மக்கள் தம்மைத் தேர்தல்களுக்குத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் நடத்தப்படும் நாளில் வாக்குரிமை இருக்கும் யாவருமே வாக்குச் சாவடிகளுக்கு கொரோனா முகமூடி அணிந்து செல்லவேண்டும். சமூக இடைவெளியைப் பாதுகாத்துக் கொண்டு வாக்களிக்க வேண்டும். அரசாங்க சார்புக் கட்சிகளுக்கு வாக்கிடுவதால் தமிழ் மக்களின் வருங்காலம் பிரகாசமடையாது. மாறாக மேலும் மேலும் தமிழ் மக்கள் வாழ்க்கை சிங்கள ஆதிக்கத்தினுள் அமிழ்ந்துவிடும். அரசாங்க சார்புக் கட்சிகள் எனும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனுள் அடங்கும்.

கடந்த நான்கரை வருடங்களாக நல்லாட்சி என்ற பெயரில் உருவான அரசாங்கத்துடன் இணக்க அரசியலைச் செய்து வந்த கூட்டமைப்பினர் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எந்தவிதமான பலமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் காலத்தைக் கடத்திவிட்டுத் தற்போதைய தேர்தல் காலத்தில் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதும் கண்துடைப்பு வேலைகளையே செய்து வருகின்றார்கள். இவர்கள் நினைத்திருந்தால் நாடாளுமன்றத்தில் இருந்து பேரம் பேச வேண்டிய நேரத்தில் பேரம் பேசி எங்கள் அரசியற் கைதிகளை விடுவித்திருக்கலாம். அத்துடன் தற்போதும் கூட தொடர்ந்து வரும் அரசாங்கங்கள் தமிழ் அரசியற் கைதிகளைப் பணயக் கைதிகளாகவே வைத்துக் கொண்டு வருகின்றன. சிங்களப் போர்க் குற்றவாளிகளைக் கைதில் இருந்து தப்பவைக்க, அவர்களுக்கு எதிராகச்ச் சட்ட நடவடிக்கைகள் நடைபெறாதிருக்க, மேற்படி தமிழ் அரசியற் கைதிகளைப் பணயமாகப் பாவிக்கவே அவர்களைத் தொடர்ந்தும் சிறையில் வாட வைத்திருக்கின்றார்கள். ஆகவே நாம் தேர்நதெடுக்கப்பட்டால் சட்ட ரீதியாகக் கட்டமைப்புக்களை உருவாக்கிச் செய்யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் நாம் பரிசீலித்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதேசமயம் ஜனாதிபதியுடன் இவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சு நடத்துவோம். முக்கியமாகத் தெரிவுசெய்யப்படும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐ. நா., சர்வதேசநாடுகள், சர்வதேசஅமைப்புக்கள், இந்திய அரசு ஆகியவற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்போம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் வகையில் கடந்த 11 வருடங்களாக அவர்களின் உறவுகள் போராடிவருகின்றனர். அவர்களையும் உள்ளடக்கிப் போராட்டங்களை நிலத்திலும் புலத்திலும் விரிவுபடுத்திப் போராட்ட வடிவங்களையும் விரிவுபடுத்திச் செயற்படுவோம். போராடும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை அறிந்து, நிறைவேற்றக் கூடிய தேவைகளைப் புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்பதனை இத் தருணத்தில் நான் தமிழ் மக்களாகிய உங்களுக்குக் கூறி வைக்கவிரும்புகின்றேன். நாம் ஒரு பலமான கட்சியாக நாடாளுமன்றம் செல்வதற்கு உங்கள் வாக்குகளை வேண்டுகிறோம்.

தமிழ் மக்களின் வருங்காலத்தைச் செழுமையடையச் செய்யக் கூடிய ஒரேயொரு கட்சி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியே.

காலைக்கதிர்
Kalaikkathir

# சவூதியில் மட்டும் கொரோனாவுக்கு 18 இலங்கையர்கள் பரிதாப மரணம்

## காப்புறுதி இழப்பீடு வழங்க முடிவு

கொரோனா வைரஸ் தொற்றால் சவூதி அரேபியாவில் இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த இலங்கையர்களுக்குக் காப்புறுதி இழப்பீடு வழங்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபத்தின் ஊடாக கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் காப்புறுதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களுக்கு காப்புறுதி இழப்பீடாக சுமார் 5 லட்சம் அல்லது 6 லட்சம் ரூபா அடிப்படையில் பகிர்தளிக்கப்படவுள்ளது.

இவ்வாறு காப்புறுதி பதிவு செய்து வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள் கொரோனாத் தொற்று நோயால் பணிபுரியும்போது உயிரிழந்தால் சுமார் 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும். தற்போது அதற்காக சுமார் 20 பேரின் கோப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் திகதிக்குப் பின்னர் பதிவு செய்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்களுக்காக இந்த இழப்பீடு 6 லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், பணியகத்தில் பதிவுசெய்த காலம் நிறைவடைந்து மீண்டும் புதுப்பிக்காமல் பணியாற்றி உயிரிழந்தவர்களுக்குக் காப்புறுதி இழப்பீடு வழங்கப்படமாட்டாது. அவர்களுக்காக பணியகத்தின் சிறப்பு நல நிதியத்தின் கீழ் தலா 3 லட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப்படும்.

இந்த ஆண்டின் கடந்த 6 மாத காலத்துக்குள் பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்ற 40 ஆயிரத்து 143 தொழிலாளர்களுக்கு இலவசக் காப்புறுதித் தொகையை வழங்குவதற்காகப் பணியகம் சுமார் 2 கோடியே 63 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளது.

இது தவிர உயிரிழந்த அனைவருக்கும் இறுதிச் சடங்குகளுக்காக சுமார் 40 ஆயிரம் ரூபா அடிப்படையில் பகிர்ந்தளிக்கவுள்ளது. இதற்கு முன்னர் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளுக்காக 30 ஆயிரம் பகிர்ந்தளிக்கப்பட்டது .ஆனால், தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்தவர்களுக்காக மேலும் 10 ஆயிரம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை சுமார் 40 வெளிநாட்டுத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். அதில் ஆண்கள் 37 பேரும், பெண்கள் 3 பேரும் அடங்குவர்.

இதில், சவூதி அரேபியாவில் 18 பேர், குவைத்தைச் சேர்ந்த 9 பேர், ஐக்கிய அரபு எமிரேட்டில் 8 பேர் , ஓமானில் 2 பேர், கட்டாரில் 2 பேர், லெபனானில் ஒருவர் என்ற அடிப்படையில் உயிரிழந்துள்ளனர்.

# 45 பிக்குகள் உள்ளிட்ட 72 பேர் மடத்துக்குள் தனிமைப்படுத்தல்

*மொனராகலை - படால்கும்புர, கல்லோயா பௌத்த துறவிகள் மடத்தில் 45 பௌத்த பிக்குமார் உட்பட 72 பேர் மடத்துக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*ஊவா மாகாண ஆளுநர் ராஜா கொலுரே தலைமையில், ஆளுநரின் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.*

*கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இருந்து சென்ற இராணுவ அதிகாரி ஒருவர் கலந்துகொண்ட சமய நிகழ்ச்சியில் பங்கேற்ற துறவிகள் மடத்தைச் சேர்ந்த சிறிய பிக்கு உட்பட இரண்டு பிக்குகள், அந்த இராணுவ அதிகாரி பயன்படுத்திய ஒலிவாங்கியைப் பயன்படுத்தியமை காரணமாக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மொனராகலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.பி.டி.கே.அதிகாரி தெரிவித்துள்ளார்.*

*அதேவேளை, குறித்த பிக்குகளுடன் புண்ணியதான நிகழ்வில் கலந்து கொண்ட பிக்குகளும், மக்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*பசறை பரகஹமங்கட பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த இராணுவ அதிகாரி, வெல்கொல்ல பிரதேசத்திலுள்ள தனது தாய் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்குள்ள அவரது குடும்பத்தினரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.*

*குறித்த இராணுவ அதிகாரி பஸ்ஸில் முதியங்கன விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளமையுடன் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற பதுளை மாவட்ட செயலகத்துக்குச் சென்று வந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. இந்தத் தகவல்களின் அடிப்படையில் சுகாதார அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.*

# காட்டு யானைத் தாக்குதலில் வயோதிபத் தம்பதியர் மரணம்



புத்தல, ஒக்கம்பிடிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பேயாய பிரதேசத்தில் காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி தம்பதியினர் உயிரிழந்துள்ளனர். நேற்றுக் காலை இறப்பர் பால் வெட்டிக் கொண்டிருந்த இருவரே இவ்வாறு காட்டுயானைதாக்குதலுக்குஉள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தில் 57 வயதுடைய பெண் ஒருவரும் 70 வயதுடைய அவரது கணவனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். காட்டுயானைத் தாக்குதலுக்கு உள்ளான இந்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்படவிருந்தன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூநகரியில் தமிழ்க் கூட்டமைப்பின் பிரசாரத்தில் திரண்ட மக்கள் படை















தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று பூநகரியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

மாலை 5 மணிக்கு பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் ஜெயக்காந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சிறப்புரைகளை கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சசிகலா ரவிராஜ், இ.ஆர்னோல்ட் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை, தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஜெயக்குமார், தமிழரசுக் கட்சியின் பூநகரி பிரதேச கிளையின் தலைவர் குபேந்திரன், முன்னாள் பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி தில்லைநாதன், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள் பலவற்றில் தலைவராக இருந்த இரத்தினமணி ஆகியோர் நிகழ்த்தினர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# தேடப்பட்டவர் குண்டுடன் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ் மாவட்டத்தில் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த நபர் கைக்குண்டுடன் நேற்றிரவு கோப்பாய் பகுதியில் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைய நாள்களாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் சின்னவன் எனப் படும் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில் இவர் கோப்பாய் பொலிஸ் நிலையப் பிரிவில் பகுதியில் வைத்து யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு தாலிக்கொடி, நான்கு சங்கிலிகள், கைக்குண்டு ஆகியன மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இறந்துபோன பின்பும் மக்கள் என்னைப் பற்றி பேசுவார்கள்!

## நான் நேர்மையானவன்; மைத்திரி கூறுகின்றார்

மொரகஹாகந்த திட்டத்தை உருவாக்கி, பொலனறுவையைப் புரட்டிப்போட்டு, பிசோபுர என்ற பெரிய குடியேற்றத் திட்டத்தை உருவாக்கி மக்களைக் குடியேற்றியவன் நான். அடுத்த 25 வருடங்களில் நான் இறந்துபோன பின்பும் என்னைப் பற்றி மக்கள் பேசுவார்கள்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலனறுவை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நேர்மையான மனிதன். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது கோடிக்கணக்கில் நிதி உதவிகள் எனக்குக் கிடைத்தன. அந்தப் பணத்தை நான் பையில் போட்டுக்கொண்டிருக்கலாம். பிள்ளைகளுக்கு வீடுகள், காணிகளை வாங்கி கொடுத்திருக்கலாம். ஆனால, நான் அப்படி எதுவும் செய்யவில்லை. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி என்ன செய்தேன் எனத் தேடிப் பாருங்கள்.

எனக்குக் கிடைத்த அந்த நிதி உதவியில் அநுராதபுரத்தில் சிறுநீரக வைத்தியசாலையை நிர்மாணித்தேன். அதனை நிர்மாணிக்க அரச பணத்தில் ஐந்து சதத்தைக்கூடப் பெறவில்லை – என்றார்.

# பொய்யுரைக்கின்றார் சரவணபவன்

## – போட்டுத் தாக்குகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

என்ன பேசுகின்றோம் என்று தெரியாது எதையாவது பேசுவோம் என்று பேசுகின்ற சரவணபவன் போன்றவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களில் எந்தவித உண்மையும் இல்லை. மேடை கிடைக்கின்றது என்றபடியால் எதையாவது பேசிவிட்டுப் போகலாம் என்று சரவணபவன் போன்றவர்கள் கருதக்கூடாது.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், இந்தப் பொதுத்தேர்தலில் பல கட்சிகள் பிரிந்து நிற்பதால் யாழில் ஏழு ஆசனங்களும் தங்களுக்குக் கிடைக்கலாம் என்ற அடிப்படையில் கருத்தொன்றை முன்வைத்திருக்கின்றாரே என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சரவணபவன் தொடர்பில் கடுமையான குற்றச்சாட்டுக்களை சுரேஷ் முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலத்திச் சென்றவர்கள் அனைவரையும் இணைத்து நாங்கள் ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கின்றோம். அதுதான் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி. இரண்டாவது சரவணபவன் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சிக்குள்தான் இப்போது உடைவுகளும் பிளவுகளும் நிறைந்திருக்கின்றன.

சுமந்திரனை எதிர்த்து சரவணபவன் தனது பத்திரிகையில் நிறையவே எழுதிக்கொண்டிருக்கின்றார். அதைப் பற்றிக் கேட்டால் அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று கூறுவார். ஆனால், அவரது பத்திரிகை அதைத்தான் செய்யும்.

சிறிதரனும் சுமந்திரனும் வெளிப்படையாக இப்போது கூட்டுச் சேர்ந்திருக்கின்றார்கள். அதில் சிறிதரன் மிக வெளிப்படையாக சில விடயங்களைச் சொல்லுகின்றார். குறிப்பாக அன்ரன் பாலசிங்கம் போல் எங்களுக்கு ஒரு அறிவாளி கிடைத்திருக்கின்றார். இந்த அறிவாளி போல் யாராவது சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கேட்கின்றார்.

தமிழ்ச் சமூகத்துக்குள் சுமந்திரனைத் தவிர யாரையாவது காட்டுங்கள் என்று அவர் கேட்பதென்பது என்னைப் பொறுத்தவரையில் அவர் தன்னையும் அறிவாளியாகக் கருதவில்லை. அவரது பேச்சில் இருந்து அவர் அறிவாளி அல்ல என்பதும் விளங்குகின்றது. ஆகவே, அவர் கேட்கின்ற விடயம் என்னவென்றால் சுமந்திரனைப் போல ஓர் அறிவாளி எங்களுக்கு வேண்டும்.

அவருக்கு வாக்களிக்கச் சொல்லி கேட்பதால் தான் தோற்கடிக்கப்பட்டால் அந்த வரலாற்றுத் தோல்வியைத் தான் ஏற்றுக்கொள்வேன் என்றும் சிறிதரன் கூறுகின்றார். ஆக சுமந்திரனுக்கு வாக்களிக்கச் சொல்லிக் கேட்டால் தான் தோற்கடிக்கப்படலாம் என்பதும் அவருக்கு விளங்குகின்றது. அது என்ன வரலாற்றுத் தோல்வி என்று எனக்கும் விளங்கவில்லை. ஆக தனது தோல்வியை வரலாற்றுத் தோல்வியாக அவர் நினைக்கின்றார் போலும்.

எனவே, பிரச்சினை எங்கே இருக்கின்றது என்றால் அது தமிழரசுக் கட்சிக்குள்தான்; தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்குள்தான். இன்றைக்கு வரையில் ஒழுங்கு முறையான ஒரு பொதுக் கூட்டத்தை இவர்களால் கூட்ட முடிந்ததா? இதுவரையில் நாங்கள் பத்துக் கூட்டங்களுக்கு மேல் பல்வேறுபட்ட இடங்களில் நடத்தியிருக்கின்றோம். எங்களுடைய எல்லா வேட்பாளர்களும் அதில் கலந்து கொள்கின்றார்கள். ஆனால், தமிழரசுக் கட்சியால் ஒரு பொதுக் குழுக் கூட்டத்தையேனும் போட முடியவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை.

ஆகவே, ஊடக அமையம் போன்ற இடத்தில் மைக்கோ அல்லது மேடையோ கிடைத்தால்தான் வந்து விரும்பின மாதிரி பேசி விட்டுப் போகலாம் என்று சரவணபவன் கருதக்கூடாது. அவர் தன்னை ஓர் ஊடகப் போராளி எனக் காட்டிக்கொள்கின்றார். ஆனால், அவருடைய ஊடக நிறுவனத்தைச் சார்ந்தவர்களை அவ்வாறு செயற்பட விடுவதில்லை. ஆக அவருடைய கருத்துக்கள், செயல்கள் எல்லாம் வந்து முட்டி மோதி முரண்பட்டு என்ன பேசுவது என்றெல்லாம் தெரியாது வந்து இருந்து எதையாவது பேசுவம் என்ற நிலைதான் இருக்கின்றது. சரவணபவன் பேசுவதில் எந்தவித உண்மையுமில்லை – என்றார்.

# கொரோனாத் தொற்று 2,697 நேற்று 10 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்று 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய பாதிப்படைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,697 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்துடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய கம்பஹாவைச் சேர்ந்த இருவரும், கந்தக்காடு போதைப் பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தைச் சேர்ந்த 3 கைதிகளும், சேனபுரா புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த 3 கைதிகளும், இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய ஒருவரும், கந்தக்காடு போதைப் பொருள் புனர்வாழ்வு மத்திய நிலைய கொரோனாத் தொற்று ஊழியருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய இராஜாங்கனையைச் சேர்ந்த 12 வயது சிறுமி ஒருவரும் உள்ளடங்குகின்றார்கள்.

தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 674 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேநேரம் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் 99 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் உள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 2,012 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

# யாழ்ப்பாண வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று மாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றின் மீது இனம் தெரியாத மர்மக் கும்பல் ஒன்று பெற்றோல் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் வீட்டில் தரித்து நின்ற காருக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வீட்டின் சில பகுதிகளும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இளைஞர்களை பொலிஸ் அதிகாரி தாக்கியதால் பதற்றம்; வீதி மறியல்

## வவுனியாவில் பரபரப்பு

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இளைஞர்கள் இருவரை தாக்கியதால் அந்தப் பகுதியில் குழப்பமான நிலை ஏற்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் ஈச்சங்குளம் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர்கள் கருத்து தெரிவிக்கும்போது,

நேற்று மாலை அந்தப் பகுதியில் நின்றிருந்த சமயம் அவ்வீதியால் வருகை தந்த ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்மை அங்கிருந்து செல்லுமாறு தெரிவித்துவிட்டுச் சென்றார்.

பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் வந்த அவர் திடீர் என்று எம்மைத் தாக்கினார். நாம் எந்தக் குற்றமும் செய்யாத நிலையில் அவர் எம்மை தாக்கினார் என்று பாதிக் கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் ஒன்று திரண்ட இளைஞர்கள் மற்றும் ஊர் மக்கள் ஈச்சங்குளம் பிள்ளையார் ஆலயத் திற்கு முன்பாக உள்ள பிரதான வீதியின் குறுக்காக தடைகளை ஏற்படுத்தியமையுடன், வீதியை வழிமறித்து தமக்குரிய நீதியை வழங்குமாறு கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமை பொலிஸ் நிலைய உப பொறுப்பதிகாரி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான இளைஞர்களை இன்று வன்னிமாட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்குச் சென்று முறையிடுமாறும், தற்போது போராட்டத்தை கைவிடுமாறும் பொலிஸ் அத்தியட்சகரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதற்கமைய போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாக தாண்டிகுளம் ஊடாக பாலமோட்டை செல்லும் பிரதான பாதையூடான போக்குவரத்து இரண்டுமணி நேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் புனர்வாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பத்தைக் கொண்டவர்களுக்கும் உங்களுடைய சமூகமயப்படுத்தலில் உள்ள குறைபாடுகளையும் எதிர்காலத்தை மையப்படுத்திய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் ஏனைய பிரச்சினை தொடர்பான விசேட கலந்துரையாடல்.

**இடம்:- வின்சர் பட மாளிகை (வின்சர் தியேட்டர்)**
**இல 140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**காலம்:- 19.07.2020 (ஞாயிறு) முற்பகல் 10.30 மணியளவில்.**

**உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்**

2020 நாடாளுமன்றத் தேர்தலும் எனது அரசியல் பிரவேசமும்

பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

# எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!

2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தேசியத் தலைவரின் கட்டுப் பாட்டுக்குள் இயங்கிய அரசியலில் நாடாளுமன்றத் தெரிவுக் காலப்பகுதி.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரைக்கும் இறுதி யுத்தகாலப் பகுதியும் தேசியத் தலைவரையும் எமது சகோதரங்களையும் தேசியத்தையும் அழிப்பதற்குத் துணைபோன காலப்பகுதி.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரைக்கும் நீங்கள் போட்ட வாக்குகளால் எமது தேசமும் எமது மக்களும் முழுமையாக ஏமாற்றப்பட்டு சிதறடிக்கப்பட்ட காலப்பகுதி.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதி நான்காவது தடவையாக முற்று முழுதாகத் தமிழ்த் தேசம் சின்னாபின்ன மாக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டு, இன்றைய தலைமுறை இளை ஞர்களை வாள்வெட்டுக்கு அழைத்துச் சென்று, போதைப்பாவனை, கஞ்சாப் பாவனை, கடத்தல், கொள்ளை, கலாச்சார சீரழிவு மற்றும் பல பல பல...... பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தேசமாக எங்களுடைய தேசத்தைக் கொண்டு சென்ற அரசியல் வாதிகளின் காலப்பகுதி தொடர்வதற்கு அனுமதியோம்.

2020 ஆம் ஆண்டுத் தேர்தலில் நான் உங்க ளிடம் கேட்பது, எங்களுடைய தமிழ்த் தேசத்தை பொரு ளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான திட்டம் என்னிடம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்த் தேசம் அபிவிருத்தி யடையும் என்பதை உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.

## தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.



## 'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'

5

# வின்னன்

ப.வரதராஜசிங்கம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2020 இல் வெளியிடப்பெற்றது.